மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை *(13-2-2004)* காலை *10-00* மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர் பேரவை முற்பகல் 11-13 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

அ. சட்டமுறை விதிகளும் ஆணைகளும்

41. 2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுபான சில்லறை விற்பனை (அங்காடிகள் மற்றும் மது அருந்தகங்கள்) விதிகளில் திருத்தங்கள் செய்தது குறித்து மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறையின் 12-11-2003 ஆம் நாளிட்ட 295 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1937 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54 (3) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]

42. 25 புராதன (கிளாசிக்) மற்றும் நீண்ட காலத்திற்கு முன் இறக்குமதி செய்யப்பட்ட (வின்டேஜ்) மோட்டார் வண்டிகளுக்கும், 8 புராதன (கிளாசிக்) மற்றும் நீண்ட காலத்திற்கு முன் இறக்குமதி செய்யப்பட்ட (வின்டேஜ்) மோட்டார் சைக்கிள்களுக்கும் செலுத்தத்தக்க ஆண்டு வரியைப் பொறுத்தவகையில், வண்டிகள் தமிழ்நாட்டில் பதிவு செய்யப்பட்டு பராமரிக்கப்பட்டவையாக இருக்க வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டு முறையே மோட்டார் வண்டி ஒன்றுக்கு ரூபாய் 1,000/- என்றும், மோட்டார் சைக்கிள் ஒன்றுக்கு ரூபாய் 250/- என்றும், ஒரு தடவை செலுத்தக்கூடிய வரி முறையானது 2004 ஏப்ரல் 1 அன்று முதற்கொண்டு செயலுக்கு வரும் என்றும் திருத்தியமைத்தது குறித்து உள் (போக்குவரத்து-1) துறையின் 29-10-2003 ஆம் நாளிட்ட 1037 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1974 ஆம் ஆண்டு தமிழ்நாடு மோட்டார் வாகனங்கள் வரி விதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25 (2) பிரிவின் கீழ் பேரவைமுன்வைக்கப்பெற்றது]

2004 பிப்ரவரி 12]

43. 2002-2003 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு காவலர் வீட்டு வசதிக் கழகத்தின் இருபத்தி இரண்டாவது ஆண்டறிக்கை. (1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் [மத்திய சட்டம் 1/1956) 619-A பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்)

44. 2000-2001 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் பத்தொன்பதாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-A பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்)

45. 2002-2003 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்தின் ஐம்பத்தி நான்காவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 1/1956) 619-A பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்)

46. 2002-2003 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு கனிம நிறுவனத்தின் இருபத்தி ஐந்தாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 1/1956) 619-A பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்)

47. 2002-2003 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு கோழியின வளர்ச்சிக் கழகத்தின் முப்பதாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 1/1956) 619-A பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்)

48. சென்னை, கெல்லீஸ், மில்லர்ஸ் சாலையில் உள்ள டாக்டர் அம்பேத்கர் அரசு சட்டக் கல்லூரி மாணவர் இல்லத்திலும், அதனைச் சுற்றியுள்ள பகுதியிலும் 07-12-2001 ஆம் நாளன்று நடைபெற்ற வன்முறைச் சம்பவங்களுக்கு வழிகோலிய காரணங்கள் மற்றும் சூழ்நிலைகள் குறித்து விசாரணை செய்வதற்காக அமைக்கப்பட்ட திரு. நீதியரசர் கே.எஸ். பக்தவத்சலம் விசாரணை ஆணையத்தின் அறிக்கை. [1952 ஆம் ஆண்டு விசாரணை ஆணையச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 60/1952) 3(4) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்)